விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 218 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 09 செவ்வாய்க்கிழமை (25.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### எதிர்வரும் வெள்ளிக்கிழமை

## வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால்

### கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதிகோரி உறவுகள் அழைப்பு

*(யாழ்ப்பாணம்)*

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தாலை மேற்கொள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. *(05ஆம் பக்கம் பார்க்க)*

### காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

## கப்பல் சேவையை ஆரம்பிக்க 6 மாதங்கள் தேவைப்படும்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் தமிழகத்தின் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்க இன்னும் 6 மாதங்கள் ஆகும் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாகப்பட்டினத்தில்பயணிகள்முனையம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கி 15

## அமைதியான நினைவேந்தல் உரிமை முக்கியமானது

### கொழும்பில் கறுப்பு ஜூலை நினைவேந்தலில் பொலிஸாரின் அடாவடி தொடர்பில் சுவிஸ் தூதுவர்

(கொழும்பு)

கடந்த காலங்களை கையாள்வதற்கும் ஐக்கிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் அமைதியான முறையில் நினைவுகூருவதற்கான உரிமை மிகவும் முக்கியமானது என இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் டொமினிக் பேர்க்லெர் 15

### சிறுமியின் மாதிரி கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டில் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் உடற்கூற்று மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு 15

### 13ஐ அமுலாக்க ஜனாதிபதி உறுதி

## பொலிஸ் அதிகாரங்கள் கலந்துரையாடியே முடிவு

### ரணிலை சந்தித்த பின் விக்னேஸ்வரன்

*(கொழும்பு) 13ஆவது திருத்தச் சட்டத்தினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்தியே தீருவார். அவ் நிலைப்பாட்டில் அவர் உறுதியுடன் உள்ளார். பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தமிழ்த் தரப்புடன் கலந்துரையாடிய பின்பே ஜனாதிபதி முடிவெடுப்பார் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

### நுவரெலியாவைச் சேர்ந்த

## 3 வயது சிறுமி உலக சாதனை

(நுவரெலியா)

நுவரெலியா - கொட்டகலையை சேர்ந்த பவிஷ்ணா என்ற மூன்று வயது சிறுமி 16

### வடமராட்சியில் மோட்டார் குண்டு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் 80 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்று நேற்று திங்கட்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் குண்டு காணப்படுவதாகபொது மக்களால் பொலி 15

## 13ஐ அமுலாக்குவது தொடர்பில் சர்வகட்சி கூட்டம் நாளை

### கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக தீர்மானிப்பதற்காக ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சர்வ கட்சி கூட்டம் நாளை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி தமது இந்திய விஜயத்துக்கு முன்னர் இந்த விடயம் தொடர்பில் வடக்கு-கிழக்கு தமிழ் 15

### சர்வ கட்சி கூட்டம்

### ஜே.வி.பி புறக்கணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் சர்வ கட்சி கூட்டத்தை தேசிய மக்கள் சக்தி புறக்கணிப்பதாக அதன் பாராளுமன்ற உறுப்பினர் விஜித 15

## தாய்ப்பால் புரைக்கேறியதில் 9 மாத குழந்தை மரணம்

### நெடுந்தீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால் புரைக்கேறியதில் ஒன்பது மாதமேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நெடுந்தீவு 13ஆம் வட்டாரத்தை சேர்ந்த மதன் மௌலின் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் குழந்தைக்கு 15

## பொலிஸ் அதிகாரம் இல்லாத 22ஆவது திருத்தம் சபையில்



### உதய கம்மன்பில எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து பொலிஸ் அதிகாரத்தை இல்லாது செய்யும் வகையில், 22 ஆவது திருத்தச்சட்டமூலமொன்றை அடுத்தவாரம் அளவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியங்காட்டில் 17 வயது சிறுமி சடலமாக மீட்பு

## நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப்பகுதியில் வீட்டுப்பணி புரிந்து வந்த சிறுமி கேதீஸ்வரன் தர்மிகா (வயது 17) நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் வெளியிட்ட வடக்கு மாகாணஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள், இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக் கும், உத்தியோகத்தர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருடனும், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் இது தொடர்பாக அவசரமாகத் தொடர்புகொண்டு கலந்துரையாடிய அவர், இதில் குற்றம் ஏதும் இழைக்கப்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது பாரபட்சமின்றி உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான உண்மை என்ன என்பதை தீர விசாரித்து அறியுமாறு கூறியுள்ள ஆளுநர் அவர்கள் ஆளுநர் செயலகத்தின் தொடர்புபட்ட அலுவலர்களையும் இச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு பூரண அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயற்பாடுகள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருப்பது தமக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாக கூறிய ஆளுநர் அவர்கள் இது தொடர்பான தமது ஆழ்ந்த கண்டனத்தை வெளியிட்டதுடன்,

இந்தச் சம்பவம் ஒரு குற்றச் செயலாக அமைந்திருப்பின் அது தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை ஆளுநர் செயலகம் தொடர்ந்து கண்காணிக்கும் எனவும் இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராதிருக்க தேவையான காத்திரமான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுப்பதையும் செயலகம் உன்னிப்பாக அவதானிக்கும் என்று தெரிவித்தார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயற்பாடுகளை தடுக்கும் வேலைத்திட்டங்களையும் வேகமாக முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள அவர், பொதுமக்களும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாணம் தழுவிய அளவில் பெண்கள் மற்றும் சிறுவர் எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பாக, வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அதிகாரிகளுடன் மாகாணத்தின் 5 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் சம்பந்தப்பட்ட அலுவலர்களையும் 'சூம்' தொழில்நுட்பம் மூலம் இணைத்து விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியிருந்த ஆளுநர் அவர்கள், அடையாளம் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்ததுடன், அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பணிப்புரை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பாப்பரசரின் பிரதிநிதி யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

திருத்தந்தையின் பிரதிநிதி யாழ்ப்பாணத்திற்கு மூன்று நாள் விஜயமாக வருகை தந்துள்ளதாக யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் அறிவித்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கைக்கான பிரதிநிதி அதி விந்தனைக்குரிய கலாநிதி பிறாயன் ஊடக்வே மூன்று நாள் அப்போஸ்தலிக்க விஜயமாக யாழ்ப்பாண மறை மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள திருத்தந்தையின் பிரநிதிதி இன்று காலை குருநகர் புனித யாகப்பர் ஆலய திருவிழாவிலும், புதன்கிழமை இளவாலை புனித அன்னாள் ஆலயத் திருவிழாவில் பங்கேற்பதுடன், தீவக மறைக்கோட்ட பங்குகளுக்கும் விஜயம் செய்வதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களையும் இடங்களையும் பார்வையிடுவார். (ம-7)

# அரசின் புதிய சுற்றுலா திட்டம் விரைவில்-ஜனாதிபதி

நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக அதிக செயலூக்கம் கொண்ட 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் உள்ளடங்கலாக 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவர்வதை நோக்காக கொண்ட அரசாங்கத்தின் புதிய "Visit Sri Lanka" என்ற மூலோபாய சுற்றுலாத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் படி, எதிர்வரும் சில மாதங்களில் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

வைத்தியம்
சகல நாள்பட்ட நோய்களிற்கும் அக்குபன்சர் (Acupuncture) சிகிச்சை மூலம் தீர்வு பெற அழையுங்கள்
முன்பதிவு அவசியம்
077 035 7307
Shan's Health Care
K.K.S Road,Kokuvil
(16400)

நோயாளர் காவுவண்டியில்

# குழந்தையின் சடலத்துடன் தாயை காக்க வைப்பு

## யாழ்.போதனா நிர்வாகம் மீது குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

உயிரிழந்த குழந்தையின் சடலத்துடன் நோயாளர் காவு வண்டியில் வந்த இளம் தாயை பல மணி நேரம் நோயாளர் காவு வண்டியில் காக்க வைத்திருந்ததாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுப் பகுதியை சேர்ந்த மௌலீஸ் எனும் 09 மாத குழந்தை நேற்றைய தினம் திங்கட்கிழமை தாய்ப்பால் அருந்திய நிலையில் பால் புரைக்கேறி உள்ளது.

அதனை அடுத்து பெற்றோர் குழந்தையை நெடுந்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது , குழந்தை உயிரிழந்து விட்டது என வைத்தியர் அறிக்கையிட்டார்.

குழந்தையின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு பெற்றோர் வைத்தியசாலையில் கோரிய போது, யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனையை பெற்றே சடலத்தை கையளிக்கலாம் என நெடுந்தீவு வைத்தியசாலையில் கூறியுள்ளனர்.

சட்ட வைத்திய அதிகாரியை நெடுந்தீவு வைத்தியர் தொடர்பு கொண்டு கேட்ட போது, குழந்தையின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும், சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பணித்துள்ளார்.

அதனை அடுத்து குழந்தையின் தாயிடம், குழந்தையின் சடலத்தை ஒப்படைத்து, யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

தாய், தனது குழந்தையின் சடலத்துடன், நெடுந்தீவில் இருந்து படகில் குறிகாட்டுவான் பகுதிக்கு வந்து, அங்கிருந்து வேலணை வைத்தியசாலை நோயாளர் காவு வண்டிக்கு அறிவித்து அதில் குழந்தையின் சடலத்துடன் தாய் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில், நோயாளர் காவு வண்டியில் எவ்வாறு சடலத்தை ஏற்ற முடியும் என கேள்வி எழுப்பி தாயை நோயாளர் காவு வண்டியில் இருந்து இறங்க விடாமல் பல மணிநேரம் குழந்தையின் சடலத்துடன் காக்க வைத்துள்ளனர்.

பின்னர் நீண்ட இழுபறியின் பின்னர் தாயை நோயாளர் காவு வண்டியில் இருந்து இறங்க அனுமதித்து, குழந்தையின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக பிரேத அறையில் ஒப்படைக்க அனுமதித்துள்ளனர்.

மனிதாபிமானமின்றி, குழந்தையின் சடலத்துடன் தாயை நீண்ட நேரம் நோயாளர் காவு வண்டியினுள் காக்க வைத்தமை தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,33,124)

ஏழாவது சிரார்த்ததின நினைவலைகள்

தோற்றம் 1949 - 08 - 13



மறைவு 2016 - 08 - 11

அமரர் சபாரத்தினம் தர்மரத்தினம்

(ஓய்வுநிலை சிரேஷ்ட சாலைப் பரிசோதகர்
இலங்கை போக்குவரத்துச் சபை - பருத்தித்துறை சாலை)

உறவுகளை, ஊரவரை, நண்பர்களை வசீகரச்சிரிப்பினால் ஈர்த்தவரே
மூத்தவர்களையும் இளையோரையும் பண்பினால் நேசித்தவரே
பிறர் நன்மையை உன் நன்மை எனக்கருதி வாழ்ந்திட்டவரே
ஆலடியான் உனக்களித்த பொறுப்புக்களை பாங்குடனே நிறைவேற்றினீரே
சமூகசேவையினை உன்மூச்செனக்கொண்டு தலைமை பல வகித்தவரே
ஆண்டுகள் ஏழுகடந்தாலும் நினைவுகளில் என்றும் நிறைந்தவரே
நீங்கள் காட்டிய வழித்தடத்தில் என்றும் பயணிப்போம்
உங்கள் ஆத்மா ஆலடிப் பாலகணபதியின்
பாதங்களில் சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

மனைவி - கலாவதி
பிள்ளைகள் - செந்தூரன்
குமரன், துவாரகன்

கலாகேந்திரா,
அல்வாய்.

(C-6963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா காலூன்றினால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும்

## சரத் வீரசேகர

**(கொழும்பு) "இந்தியா, இலங்கையில் காலூன்ற பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருக்கும் எவரும் கை உயர்த்தக்கூடாது. அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகும்" என ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர தெரிவித்தார்.**



இந்தியா காலூன்றினால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும். இதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக் கூடாது. அது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது" என அவர் தெரிவித்தார். (நி-5)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் போது இலங்கையையும் இந்தியாவையும் நில ரீதியாக இணைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுக்கு இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பில் சரத்வீரசேகர கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் கடற்படைத் தளபதி என்ற ரீதியிலும் மக்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் இந்தக் கருத்தை அரசிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# 2048 ஆம் ஆண்டு வரை இலங்கை கடன் செலுத்த வேண்டும்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

எவர் ஆட்சிக்கு வந்தாலும் வெளிநாட்டுக் கடன் தொகையை 2048 ஆம் ஆண்டு வரை செலுத்த நேரிடுமென போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். பொலநறுவை கதுறுவெல டிப்போ வளாகத்தில் ஊழியர்களை நேற்று முன் தினம் சந்தித்து உரையாடிய போதே அவர் இதனை தெரிவித்தார். 2022ஆம்ஆண்டு டிசெம்பர் வரை இலங்கை செலுத்த வேண் டிய வெளிநாட்டுக்கடன் தொகை 36 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

அரசின் மொத்த வெளிநாட்டுக் கடனில் எதிர்வரும் 5 வருடங்களில் முதிர்ச்சியடைவது நூற்றுக்கு 37 வீதமாகும். எஞ்சிய 51 வீதம் 6 தொடக்கம் 20 வருடங்களில் முதிர்ச்சி அடையும். ஏனைய நூற்றுக்கு 12 வீதம் அடுத்த இருபது வருடங்களின் பின்னரே கடன் முதிர்வடையும்.

தற்போது நாம் 2023 ஆம் வருடத்தை கடந்து வருகின்றோம். 2048 வரை நாட்டை எவர் ஒருவர் ஆட்சி செய்தாலும் கடன் முதிர்ச்சி அடையும் போது அதனை செலுத்துவதற்கு நாம் அனைவரும் சட்டத்தால் கட்டுப்பட்டுள்ளோம். உதாரணமாக 2030 ஆம் ஆண்டு மார்ச் 28 இல். பத்து வருட இறையாண்மை பிணை முறி நிறைவடைவதால் 1,500 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்த வேண்டியுள்ளது.

2030 ஆம் ஆண்டில் யார் ஆட்சிசெய்தாலும் இந்த 1,500 மில்லியன் டொலரை செலுத்த தயாராக இருக்க வேண்டும். அனைவரும் நினைவில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், ஹம்பாந்தோட்டை துறை முகத்தை நாம் விற்று பெற்றுக் கொண்டது 1,400 மில்லியன் டொலர்கள் மாத்திரமே. அது போன்று விற்பதற்கு இன்று எம்மிடம் எந்தச் சொத்துமில்லை. எதிர்காலத்தில் யார் ஆட்சிக்கு வர முயற்சி செய்தாலும் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் எவ்வாறு இந்த பழைய கடன் தொகையை செலுத்துவது என் பது பற்றி மக்களுக்கு குறிப்பிட்டாகவே வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கடந்த 7 வருடங்களில் 587 வகையான தரமற்ற மருந்துகள் பாவனையில் இருந்து நீக்கம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஏழு வருடங்களில் 587 வகையான தரமற்ற மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளதாவது,

2017 இல் 93 வகை மருந் துகளும் 2018 இல் 85 வகை மருந்துகளும் 2019 இல் 96 வகை மருந்துகளும் 2020 இல் 77 வகை மருந்துகளும் 2021 இல் 85 வகை மருந்துகளும் 2022 இல் 86 வகை மருந்துக ளும் 2023 இல் 65 வகையான மருந்துகளும் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளும் பதிவு செய்யப்பட்ட இறக்குமதி செய்யும் மருந்துகளும் தரமற்றவை என பரிசோதனையில் தெரிய வந்தால் அவை அகற்றப்படும்.

இந்தியக் கடன் உதவியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 278 வகையான மருந்துகளில் ஒரு மருந்து மட்டுமே தரமற்றது என கண்டறியப்பட்டுள் ளது.

அவசரகால கொள்முதலின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 308 வகையான மருந்துகளில் ஒரு மருந்து மட்டுமே தரமற்றது என கண்டறியப்பட்டது.

பரிசோதனை செய்வதன் மூலம் இதுபோன்ற மருந்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியும்.


அத்துடன், மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லும் போது முறையான களஞ்சிய வசதி இல்லாத நிலையில் மருந்து தரமற்றதாக மாறும் நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் களத்தடுப்பில் தீவிர முன்னேற்றம் தேவை

## பயிற்றுநர் கிறிஸ் சில்வர்வூட்



இலங்கைக்கு குறிப்பாக களத்தடுப்பில் தீவிர முன்னேற்றம் தேவை. பாகிஸ்தானிடம் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தோல்வி அடைந்த இலங்கை, இரண்டாவது போட்டியில் திறமையை வெளிப்படுத்த உறுதிபூண்டுள்ளது என இலங்கை கிரிக்கெட் அணி பயிற்றுநர் கிறிஸ் சில்வர்வூட் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மூன்று துறைகளிலும் இலங்கை முன்னேற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் முன்வரிசை வீரர்கள் பிரகாசிக்கத் தவறியதை அணித் தலைவர் திமுத் கருணாரட்ன அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

முதல் இன்னிங்ஸில் 54 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் 99 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது. இது இலங்கையின் தோல்விக்கு பிரதான காரணமாக அமைந்தது எனலாம்.

"சில அம்சங்களில் நாங்கள் முன்னேற வேண்டும். களத்தடுப்பும் அதில் ஒன்றாகும். இதனை மறைக்கத் தேவையில்லை. எமது களத்தடுப்பை முன்னேற்ற வேண்டும். நேர்மையாக கூறுவதென்றால், மூன்று துறைகளிலும் எமது அணியினர் திறமையைக் காட்டவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்டில் இலங்கை குறைந்தது 3 முக்கிய பிடிகளைத் தவறவிட்டது. இதுவும் இலங்கையின் தோல்விக்கு காரணமாக அமைந்தது.

புதிய ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சியின் ஆரம்பம் இலங்கைக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ள போதிலும் அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாட வேண்டும் என்ற அவா இலங்கைக்கு நிறையவே இருக்கிறது.

அதற்கான உந்துதல் இருக்கவே செய்கிறது. உல்க டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளைப் பெறவேண்டியதன் அவசியத்தை வீரர்கள் அறிவார்கள்.

அதுவும் சொந்த நாட்டில் வெற்றி பெறவேண்டும் என்பதில் வீரர்கள் குறியாக இருக்கின்றனர். அதற்கான உந்துதலை தொடர்ந்து பேண வேண்டும் என கிறிஸ் சில்வர்வூட் தெரிவித்தார்.

இலங்கை தனது இன்னிங்ஸை சிறப்பாக ஆரம்பிப்பதாக இருந்தால் ஷஹீன் ஷா அப்றிடி, நசீம் ஷா ஆகிய வேகப்பந்து வீச்சாளர்களை இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக எதிர்கொள்ள வேண்டும் என்பதை சில்வர்வூட் வலியுறுத்தினார். (நி-5)

# ஆசிய கிண்ணத் தொடரில் வெற்றியை தனதாக்கிய பாகிஸ்தான்



வளர்ந்து வரும் அணிகளுக்கு இடையிலான ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் ஏ அணி வெற்றியைத் தனதாக்கியுள்ளது.

கொழும்பு ஆர் பிரேமதாஸ சர்வதேச விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில், இந்திய ஏ அணி மற்றும் பாகிஸ்தான் ஏ அணி ஆகியன மோதின.

இந்தப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய ஏ அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 352 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இந்தநிலையில் 353 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய ஏ அணி 40 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 128 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியில் 108 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்த பாகிஸ்தான் ஏ அணியின் தய்யாப் தாஹிர் சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார். (நி-5)

# உலக கிண்ண கால்பந்து தொடர்

## டென்மார்க், இங்கிலாந்து மற்றும் ஜப்பான் அணிகள் வெற்றி



பெண்களுக்கான உலகக்கிண்ண கால்பந்து தொடர் தற்போது விறுவிறுப்பாக இடம்பெற்று வரும் நிலையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற போட்டிகளில் டென்மார்க், இங்கிலாந்து மற்றும் ஜப்பான் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

நியூசிலாந்தில் இடம் பெற்ற குழு வி பிரிவுக்கான போட்டியில் டென்மார்க் மற்றும் சீனாவும், இங்கிலாந்து மற்றும் ஹைட்டி அணிகளும் பலப்பரீட்சை நடத்தின.

அதன்படி முதலில் இடம் பெற்ற போட்டியில் 89 ஆவது நிமிடத்தில் அமலி வங்ஸ்கார்ட் கோல் அடிக்க சீனாவை 1-0 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி டென்மார்க் மகளிர் அணி வெற்றிபெற்றது.

இங்கிலாந்து மற்றும் ஹைட்டி அணிகளுக்கு இடையிலான மற்றுமொரு போட்டியில் 29 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி ஜோர்ஜியா ஸ்டான்வே ஒரு கோலை புகுத்தினார்.

தொடர்ந்து இரு அணிகளும் கோலை புகுத்த பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பலனளிக்காத நிலையில் இறுதியில் இங்கிலாந்து அணி 1-0 என வெற்றிபெற்றது. இதே வேளை குழு சி பிரிவில் இடம்பெற்ற மற்றுமொரு போட்டியில் சாம்பியா அணியை 5-0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி ஜப்பான் அணி வெற்றி பெற்றுள்ளது. (நி-5)

# தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப் ஜூலை 28 அன்று ஆரம்பம்

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 101 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப் தொடரில் இந்தியாவிலிருந்து 2 அஞ்சலோட்ட அணிகளுடன் 28 பேர் கொண்ட அணியொன்று பங்குபற்றவுள்ளதாக இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

101 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப் தொடர் எதிர்வரும் ஜூலை 28, 29 மற்றும் 30 ஆகிய திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இம்முறை போட்டித் தொடரில் வடக்கு-கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலிருந்து 750 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். அதேபோன்று இந்தியா மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளில் இருந்து 2 அணிகள் இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப் தொடரில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மாலைதீவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அணியொன்றும் இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப்பில் பங்கேற்கவுள்ளது.

மேலும், ஒக்டோபர் மாதம் இந்தியாவின் ராஞ்சியில் நடைபெறவுள்ள தெற்காசிய சிரேஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்சிப் தொடருக்கான தெரிவுப் போட்டியாக இம்முறை தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப் தொடர் நடைபெறவுள்ளது என பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதனிடையே, சீனாவில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றவுள்ள இலங்கை மெய்வல்லுநர் அணி ஏற்கனவே பெயரிடப்பட்டுள்ளதாகவும், தேசிய மெய்வல்லுநர் சம்பியன்சிப்பில் வெளிப்படுத்துகின்ற திறமைகளின் அடிப்படையில் இறுதி அணி தெரிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்தார் லஹிரு



இலங்கை அணியின் இடது கை துடுப்பாட்ட வீரர் லஹிரு திரிமான்னே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான 33 வயதான அவர் 44 டெஸ்ட், 127 ஒருநாள் மற்றும் 26 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு ஐ.சி.சி உலகினை இருபது-20 கிண்ணத்தை வென்ற அணியின் முக்கிய வீரராக லஹிரு திரிமான்னே திகழ்ந்தார்.

இந்நிலையில் ஓய்வை அறிவித்துள்ள லஹிரு திரிமான்னே தனக்கு அளித்த அன்பு, ஆதரவுக்காக அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி

# வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அழைப்பு

**(யாழ்ப்பாணம்)**

**கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி வடக்கு -கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தாலை மேற் கொள்ள வடக்கு -கிழக்கு வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.**

யாழ் ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற விசேட ஊடகவியலா ளர் சந்திப்பில் ஹர்த்தாலுக் கான அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

அன்றைய தினம் பேரணி ஒன்று, வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவ ட்ட செயலகத்தை சென்றடை வதற்கான ஏற்பாடுகளும் முன் னெடுக்கப்பட்டுள்ளதுடன், பேரணியில் கலந்து கொள் வோருக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள் ளது.

குறித்த ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் அர சியல் கட்சிகளும் வர்த்தகர்கள், விவசாயிகள், கடற்றொழிலா ளர்கள், பல்கலைக்கழக மாண வர்கள் என அனைத்து தரப் பினரும் ஆதரவளிப்பதுடன் முல்லைத்தீவில் நடைபெற வுள்ள போராட்டத்திலும் பங் கேற்க வேண்டும் என அழை ப்பு விடுத்துள்ளனர். (நி-5-33)

## கறுப்பு ஜூலை புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டார் அமெ. தூதுவர் ஜூலிசங்



(கொழும்பு)

கறுப்பு ஜூலையை குறிக்கும் விதத் தில் கொழும்பில் இடம்பெறும் புகைப் படக் கண்காட்சியொன்றை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் பார் வையிட்டுள்ளார்.

கறுப்பு ஜூலையின் 40ஆவது வரு டத்தின் போது சந்திரகுப்த தேனுவர மற்றும் வளர்ந்து வரும் கலைஞர்களின் கலை விசேட கண்காட்சியை நான் பார்வையிட்டேன் என ஜூலிசங் தெரி வித்துள்ளார்.

இந்தக் கலைப் படைப்புகள் கடந்த காலத்தின் காயங்களையும் அனைத்து இலங்கையர்க ளுக்குமான நியா யமான எதிர் காலத்தையும் நம்பிக்கையை யும் வெளிப்படுத் துகின்றன என அவர் தெரிவித் துள்ளார். (நி-5)

## தொடரூந்து சாரதிகள் போராட்டம் 26 தொடரூந்து சேவைகள் ரத்து

(கொழும்பு)

தொடரூந்து சாரதிகள் முன்னெடுத்து வரும் தொழிற்சங்கப் போராட்டம் கார ணமாகத் தொடரூந்து சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தொடரூந்து பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி நேற்றைய தினம் 26 தொட ரூந்து சேவைகள் இரத்து செய்யப்பட் டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், தொடரூந்து நேர ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்னிலைப் படுத்தி தொடரூந்து சாரதிகள் நேற்று முன்தினம் மதியம் முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


## வேலை வாய்ப்பு

நாவற்குழி விவசாயப் பண்ணையில் வேலை செய்வதற்கு தகுதியானவர்கள் ஆண், பெண் தொடர்பு கொள்ளவும்.

**சிவபூமி அறக்கட்டளை,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**
**021 222 7944.**

(16601)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி. நந்தினி மாதவன் அவர்களின் பாசமிகு மாமனார்

அமரர். திரு. **தம்பு கனகசபாபதி**

அவர்கள் 22.07.2023 அன்று காலமா- னதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(6961)

## இராசிபலன்

25.07.2023
ஆடி 09, செவ்வாய்க்கிழமை
சப்தமி முற்பகல் 11.13 மணிவரை
சித்திரை முன்னிரவு 8.52 மணிவரை

சுபநேரம் -10.32 -12.02 மணிவரை
இராகுகாலம் -3.02 -4.32 மணிவரை

சந்திராஷ்டமம்- உத்திரட்டாதி, ரேவதி

வளவன்




மேஷம்

நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




கடகம்

பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




துலாம்

உடல்நலனில் அதிக அக்கறை காட்டும் சூழல் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, போசன சுகமுண்டு.




மகரம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணிய காரியம் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி கரமாக அமையும், உற்சாகமான நாள்.




ரிஷபம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசமும் அதிகரிக்கும்.




சிம்மம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



விருச்சிகம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் ஆதாயம் காட்டுவீர்கள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுபகாரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



மிதுனம்

பிரியமான சிலருடன் மனம் விட்டு பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.



கன்னி

குடும்ப- மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு.



தனுசு

இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும், உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



மீனம்

தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் -செலவும் சமமாகும் நாள்.

மனித மனம் உண்மையில் எதை யோசிக்கிறோமோ அதுதான் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத உணவகங்கள்

# பாவனையாளர் அதிகார சபையினர் நடவடிக்கை எடுப்பார்களா?

(அராலி)

**யாழ். மாவட்டத்தில் அநேகமான உணவகங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத நிலை காணப் படுகிறது. இந்நிலையில் நுகர்வோரை பாதுகாப் பதற்காக யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் நடவடிக்கை எடுப்பார்களா? என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.**

நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோய்க்கு பின்னர் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவகங்களில்உணவுப் பொருட்களின் விலைகள் திடீர் திடீரென அதிகரித்தன.

இந்நிலையில் தற்போது எரிவாயு உட்பட உணவகங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் கடந்த காலத்தை விட விலை குறைப்பு செய்யப் பட்ட நிலையில் உணவகங்கள் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்காத நிலைமையே இன்றும் காணப்படுகிறது.

இலங்கையில் நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்கள் உருவாக்கப்பட்ட நிலையில் நுகர்வோரை பாதுகாப்பதற்காக விற்பனை நிலையங்கள் மற்றும் உணவகங்களில் விலைப் பட்டியல் தெளிவாகக் காட்சிப்படுத்த வேண்டும் என நுகர்வோர் அதிகார சபை சட்டம் கூறுகிறது.

ஆனாலும் யாழ். மாவட்டத்தில் இயங்குகின்ற பல உணவகங்களில் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்படாத நிலை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

ஆகவே நுகர்வோர் நியாய விலையில் தமக்கான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்த பாவனையாளர் அதிகார சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-104)



கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் மெய்திறன் விருத்தி தொடர்பான அரங்காற்றுகை செயற்பாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. (படம்: சுபேசன்)

# யாழ்.மாவட்ட செயலகத்திற்கு 9 ஆவது தடவையாக தேசிய விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகம் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்ட நடைமுறைப்படுத்தலில், ஒன்பாதவது தடவையாக தேசிய விருதிற்கு தகுதி பெற்றுள்ளது.

இவ் தேசிய விருது வழங்கும் நிகழ்வானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்டத்திற்கான தேசிய விருது முன்னாள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் தற்போதைய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமான கணபதிப்பிள்ளை மகேசனிற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் சமுர்த்திப் பணிப்பாளர் ஆகியோரும் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

மேலும் யாழ்.மாவட்டம் தேசிய மட்டத்திலான பண சேகரிப்பின் அடிப்படையில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே கோப்பாய், சண்டிலிப்பாய், சாவகச்சேரி பிரதேச செயலகங்கள் பெற்றுக் கொண்டன. இவ்விருதுகள் அப்பிரதேச செயலக பிரதேச செயலாளர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டன. (நி-5)

# கட்டைக்காட்டில் காணி சுவீகரிப்பு முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பால் இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடுப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணியை கடற்படையினருக்காக அளவீடு செய்யும் முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

கட்டைக்காடு, ஜே-433 முள்ளியானில் உள்ள இலங்கை கடற்படையினருக்கான காணி அளவீடு பிரதேச மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது.

கடற்படை முகாம் அமைந்திருக்கும் ஒன்றரை பரப்பு காணியை கடற்படையினருக்காக நேற்று அளவீடு மேற்கொள்ள இருந்த நிலையில் மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் எதிர்ப்பு காரணமாக தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதன்போது பிரதேச மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (நி-5)

## தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

வடமாகாண தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள NEC கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து தொண்டராசிரியர் களும் தவறாது குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு வடமாகாண தொண்டராசிரியர் சங்கத் தலைவர் எஸ்.சதீஸ் அறிவித்துள்ளார். (நி-5)

## பனை சார் கைப்பணிச் சங்கம் அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

தேசிய அருங்கலைகள் பேரவையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இமையாணன் மேற்குப் பகுதியில் அண்மையில் பனை சார் கைப்பணிச் சங்கம் உருவாக்கப்பட்டது.

மேற்படி கைப்பணிச் சங்கம் பனைசார் கைவினைத்திறனை மேம்படுத்தும் முகமாக உருவாக்கப்பட்டுள்ளது.



அங்குரார்ப்பண நிகழ்வில் தேசிய அருங்கலைகள் பேரவையின் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், உற்பத்தியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-30)

# 'இனவாதம்' எனும் கொடும்பாவி எரிக்கப்பட்டு கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுப்பு


(கரணவாய்)

ஜூலைக் கலவரத்தின் 40 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடியிலும் இடம்பெற்றது. அந்நிகழ்வில் 'இனவாதம்' எனும் கொடும்பாவி எரிக்கப்பட்டது. வேண்டாம் வேண்டாம் இனவாதம் வேண்டாம், தீர்வு வேண்டும், தீர்வு வேண்டும் தமிழருக்கு தீர்வு வேண்டும் போன்ற கோஷங்களும் இதன் போது எழுப்பப்பட்டன. (நி-5-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை பொறுப்புக் கூற வேண்டும்



## மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது

(ஒட்டாவா)

**இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல்களுக்கும் பொறுப்புக்கூறப்படவேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோருகின்றோம். மனித உரிமைகளுக்காக குரல்கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.**

கறுப்பு ஜூலையின் 40 ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையெங்கும் தமிழர்களுக்கு எதிராக கொடூரமான கொலைகள் நடைபெற்றன.

இவற்றில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்து பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்தார்கள். இடம் பெயர்ந்தார்கள். பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

கறுப்பு ஜூலையின் கொடுமை பதற்றத்தை அதிகரித்து சில தசாப்தங்கள் நீடித்து ஆயிரக்கணக்கானோர் மரணமாகிய ஆயுத மோதலாக மாறியதுடன் இதன் மனப்பாதிப்பை சமூகங்கள் தற்போதும் அனுபவிக்கின்றன.

சோகமான இந்த நாளில் நாம் தமிழ் கனேடியர்களுடனும் உலகம் எங்கிலும் உள்ள தமிழ் சமூகங்களுடனும் இணைந்து பாதிக்கப்பட்டவர்களை நினைவேந்தி வன்முறைக்கு எதிராக எப்போதும் குரல் கொடுப்பதற்கு உறுதியுடன் இருப்பதை மீள வலியுறுத்துகின்றோம்.

மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக பிரகடனம் செய்யும் பிரேரணையை கனேடிய பாராளுமன்றம் ஒருமனதாக அங்கீகரித்து இவ்வாண்டில் இந்த நாள் முதல்முறையாக கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் அத்துமீறல்களுக்கும் பொறுப்புக்கூறப்படவேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோருகின்றோம். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது என அவர் தெரிவித்தார். (நி-5)

# மூடப்படும் நோர்வே தூதரகம்

(கொழும்பு)

கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் எதிர்வரும் 31 ஆம் திகதியில் இருந்து நிரந்தரமாக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள நோர்வே தூதரகம் இலங்கை மற்றும் மாலைதீவுடனான இருதரப்பு உறவுகளை கையாளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் உள்ள தனது பணிகளில் பல மாற்றங்களைச் செய்வதாகவும் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் உட்பட ஐந்து வெளிநாட்டு தூதரகங்களை மூடுவதாகவும் கடந்த ஆண்டு நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மரக்கறிகளின் விலைகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

கரட் தவிர்ந்த அனைத்து மரக்கறிகளின் மொத்த விலைகள் 30% குறைந்துள்ளதாக தம்புள்ளை மொத்த வியாபாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

சுமார் 6 இலட்சம் கிலோ மரக்கறிகள் மொத்த சந்தைக்கு கிடைத்துள்ளதுடன் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் மொத்த விற்பனை வரவும் குறைந்துள்ளது.

மற்ற காய்கறிகளின் மொத்த விலை 30 சதவீதமும் கெக்கிரி, வெள்ளரி மொத்த விலை 100 சதவீதமும் குறைந்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர். (நி-5)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 14 மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத்தடை

(கொழும்பு)

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் 14 பேருக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இரவு மாணவர்கள் குழுக்களிடையே ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் தெரிவித்தார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 230 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 400 | 500 |
| தக்காளி | 380 | 320 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 240 | 200 | 300 |
| கோவா | 250 | 200 | 250 | 300 |
| கரட் | 350 | 480 | 550 | 600 |
| பூசணி | 160 | 120 | 100 | 150 |
| புடோல் | 150 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 220 | 150 | 150 |
| பாகற்காய் | 350 | 400 | 450 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 350 | 150 | 200 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 160 | 250 | 250 | 350 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 250 | 300 |
| போஞ்சி | 500 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 120 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 300 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 150 | 120 |

# சீன இராஜதந்திரி-ரணில் சந்திப்பு



(கொழும்பு)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு உறுப்பினர் யுவான் ஜியாஜூன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாய்ப்புகளுக்காக ஆசியாவுடனான தொடர்பை வெளிப்படுத்தியதோடு எதிர்கால அபிவிருத்தி திட்டங்களையும் ஜனாதிபதி முன்வைத்தார். (நி-5)


## ஏலவிற்பனை

தும்பளையில் VP நிறுவனத்திடமிருந்து பின்வரும் பொருட்கள் 29.07.2023 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

1. 300 பைப்
2. ஒரு கொய்ஸர்
3. மிக்சர் மெஷின்-1 Bag
4. மரங்கள் (கம்பஸ்)
5. ஸ்கபோர்லடிங்
6. ஜெனரேட்டர்

**பார்வையிடும் நேரங்கள்**
புதன்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை
பிற்பகல் 1.00 மணி முதல் மாலை 5 மணி வரை.

**தொடர்புகளுக்கு**
**வி.பிரசாந்த் - 077 298 4941, 077 [illegible]**

(6962)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 169

### வெளிநாட்டு வாழ்க்கை (வலி...)



துபாயில் தமிழ் ஹோட்டல் ஒன்றில் மதியம் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

நடுத்தர வயதுடைய ஒருவர் அங்கே வந்து "சாப்பிட என்ன இருக்கு" எனக் கேட்டார். அவர்கள் மட்டன் பிரியாணி, சிக்கன் பிரியாணி என்றனர்.

இவர் "எவ்வளவு" எனக் கேட்டார். அவர்கள் "சிக்கன் 10 திர்ஹம், மட்டன் 12 திர்ஹம்" என்றனர்.

"சரி சரி அதெல்லாம் வேணாம். எனக்கு ஒரு டீயும் ரெண்டு பரோட்டா மட்டும் கொடு" என்று சொல்லி எனக்கு அருகில் உள்ள நாற்காலியில் அமர்ந்தார்.

உடனே ஹோட்டல் சர்வர் அவரிடம் "இதையெல்லாம் இங்கே உட்கார்ந்து சாப்பிடக்கூடாது. பார்சல் வாங்கிட்டு போய் வெளியே சாப்பிடுங்க" என்று அனுப்பி விட்டார்.

எனக்கோ மனசு ஒரு மாதிரி ஆயிடுச்சு. பாதி சாப்பாட்டோடு வெளியே ஓடி அவரிடம் "அண்ணே உள்ளே வந்து என்கூட உட்கார்ந்து பிரியாணி சாப்பிட வாங்கண்ணே. நான் காசு கொடுக்கிறேன். பார்க்கவே மனசு கஷ்டமாயிருக்கு" என்று அவரிடம் பல முறை கெஞ்சுகிறேன்.

ஆனால் அவரோ "தப்பா நெனக்காதீங்க. எனக்கு அடுத்தவங்க காசுல வாங்கி சாப்பிட்டு பழக்கம் இல்லை. எனக்கு 700 திர்ஹம் (12,500 ரூபாய்) தான் சம்பளம். இதுலையே தான் சாப்பிட்டு செலவு பண்ணனும்.

இவ்வளவு காசு கொடுத்து இங்கே சாப்பிட்டா ஊருக்கு பணம் அனுப்ப முடியாது. இன்னைக்கு வெள்ளிக்கிழமை அசதில தூங்கிட்டதால சமைக்க நேரம் இல்லை. இருக்கிற பசிக்கு இது போதும்" என்று திட்டவட்டமாக சொல்லிட்டார்.

என்னை அறியாமல் கண்களில் இருந்து கண்ணீரோடு திரும்பி, ஹோட்டல் முதலாளியிடம் இனி இது போன்று செய்யாதீர்கள் என்று என் ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன்.

வெளிநாடு வெளிநாடு என்று பல கனவுகளோடு அலையும் இளைஞர்களே இதுதான் வெளிநாட்டு வாழ்க்கை.

ருசிக்காக சாப்பிடாமல் பசிக்காக சாப்பிடுபவனே வெளிநாட்டு வாசி.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# அரிசி ஏற்றுமதிக்கு தடை

## சர்வதேச அளவில் தட்டுப்...

### அதிர்ச்சியில் ஓ...

(டில்லி)


**இந்தியாவின் வடமாநிலங்களில் அண்மைக் கால... நெல் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே... தவிர்க்கும் விதமாக மத்திய அரசு, பாஸ்மதி அல்லாத... சர்வதேச அளவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்... தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்நிலையில் இந்தியாவின் அரிசி ஏற்றுமதித் தடையால் பல்வேறு நாடுகள் பாதிக்கப்படும்.

குறிப்பாக அமெரிக்காவுக்கு கடும் நெருக்கடி ஏற்படும். இதையடுத்து சூப்பர் மார்க்கெட்டுகளில் அரிசி வாங்க மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

அமெரிக்காவில் அரிசியைப் பிரதான உணவாக உட்கொள்ளும் ஆசிய சமூகத்தினர் அனைத்து வகை அரிசி வகைகளையும் வாங்கிச் செல்வதால் அரிசி விற்பனையில்

## இந்தோனேசியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் 15 பேர் உயிரிழப்பு, 19 பேர் மாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் நேற்று அதிகாலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் படகில் 40 பேர் பயணித்துள்ளதாகவும் 19 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 6 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தோனேசியாவின் தென்கிழக்கு சுலவேசி மாகாணத்தின் தலைநகரான கெந்தாரிக்கு தெற்கே சுமார் 200 கி.மீ (124 மைல்) தொலைவில் உள்ள மூனா தீவில் அமைந்துள்ள விரிகுடாவின் வழியாக படகு பயணிக்கும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

17,000 இற்கும் மேற்பட்ட தீவுகளைக் கொண்ட நாடான இந்தோனேசியாவில் படகு பிரயாணம் என்பது ஒரு பொதுவான போக்குவரத்து முறையாகும்.

மேலும் பாதுகாப்புத் தரங்கள் மற்றும் போதுமான உயிர்காக்கும் கருவிகள் இல்லாது படகுகள் பயணிப்பதால் இவ்வாறான விபத்துகள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## குளத்திற்குள் கவிழ்ந்த பேருந்து 17 பேர் பலி, 35 பேர் படுகாயம்

### பங்களாதேஷில் துயரச் சம்பவம்

(டாக்கா)

பங்களாதேஷில் பயணிகள் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து குளத்துக்குள் விழுந்து விபத்துக்குள் ஏனதில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் சுமார் 60 பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த பேருந்தே பரிஷால்- குல்னா நெடுஞ்சாலையில் வைத்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் இவ்விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 35 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## பா... 1...



(பீஜி...
சீனா...
கட்டட...
இடிந்து...
பேர் உ...
தெரிவிக்...

## 15 ... மீ...

(பீஜி...
சிங்...
பொது...
விசா ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டை விதித்தது இந்தியா!

## ப்பாடு ஏற்படும் அபாயம்!

### உலக நாடுகள்

**காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக அங்கு னவே, இந்தியாவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் லாத அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது. இதனால் ற்பட்டுள்ளதோடு விலை உயரும் அபாயம் உள்ளதாகத்**

கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சில கடைகளில் ஒரு நபருக்கு ஒரு அரிசி பை என்ற வரம்பில் அரிசி விற்பனை செய்யப்படுவதாகவும் இதேபோல் தேவை அதிகரிப்பது தெரிந்ததும் பல கடைகள் அரிசியின் விலையை உயர்த்தி வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 40 சதவீதமாக உள்ளது. இந்தியாவிலிருந்து 140 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கனடாவில் மீட்கப்பட்ட உலகப் போர் குண்டுகள்



(ஒட்டாவா)

கனடாவில் உலகப்போரின் போது பயன்படுத்தப்பட்ட ஒரு தொகுதி பாரிய குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கனடாவின் நியூபவுண்ட்லாண்ட் பகுதியில் இந்த குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

போர்க் காலத்தில் மூழ்கிய இரண்டு அமெரிக்க கப்பல் இடிபாடுகள் அமைந்துள்ள பகுதிகளில் இவ்வாறு சுமார் 12 குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கண்டு பிடிக்கப்பட்ட ஒரு குண்டு 227 கிலோ கிராம் எடையுடையது என தெரிவிக்கப்படுகின்றது.

கனேடிய கடற்படையினர் இந்த குண்டுகளை கண்டு பிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் யு.எஸ். எஸ். ரக்ஸ்ரன் மற்றும் யு. எஸ்.எஸ். பொலுக்ஸ் ஆகிய கப்பல்களின் இடிபாடுகள் அமைந்துள்ள பகுதியில் இந்த குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கப்பல்களும் 1942ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி நீரில் மூழ்கியிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் உலகப்போரின் போது நியூபவுண்ட்லாண்டில் அமெரிக்க கடற்படை முகாமொன்று காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# பாடசாலைக் கூரை இடிந்து விழுந்ததில் 10 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



China News Service via Getty Images



(பீஜிங்)

சீனாவில் பாடசாலைக் கட்டட மொன்றின் கூரை இடிந்துவீழ்ந்த தால் சுமார் 10 பேர் உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹேய்லோங்ஜியாங் மாகாணத்திலுள்ள குய்குய் ஹார் நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதில் இதுவரை 14 பேர் இடிபாடுகளிலிருந்து அகற்றப் பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் நால்வர் உயி ரிழந்து காணப்பட்டதாகவும் 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்பு நடவடிக்கைகளில் 39 தீயணைப்பு வாகனங் கள் சகிதம் 160 தீயணைப்பு வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் கட்டடங்களுக்குப் பொறுப்பான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# 15 நாட்கள் விசா இன்றிய நுழைவை மீண்டும் ஆரம்பித்தது சீனா

(பீஜிங்)

சிங்கப்பூர் மற்றும் புருனே பொதுமக்களுக்கு 15 நாட்கள் விசா இல்லாத அனுமதியை வழங்க சீனா மீண்டும் நடவடிக்கை முன்னெடுக்க இருப்பதாக தகவல் வெளியாகியு ள்ளது.

இதற்கமைய நாளை முதல் 15 நாள் விசா இல்லாத நுழைவை சீனா மீண்டும் ஆரம்பிக்கும் என்று இரு நாடுகளிலும் உள்ள அதன் தூதரகங்கள் தெரிவித்துள் ளன.

கொவிட் பெருந்தொற்று பரவு வதை தடுக்க மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இந்த இரு நாடுகளுக்கு மான விசாக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் மற்றும் புருனேயின் பொதுமக்களுக்கு இந்த வாய்ப்பை பயன்படுத்தி, தொழில் முறை பயணம் மேற் கொள்ளலாம் எனவும் சுற்றுலா, உறவினர்கள், நண்பர்களைச் சந்திக்கவும் பயன்படுத்திக் கொள்ளலாம் என குறிப்பிட்டுள்ளனர்.

அந்நாட்டு பொதுமக்கள் பய ன்படுத்தும் சாதாரண கடவுச் சீட்டுகளுக்கும் சீனாவிற்கு விசா இல்லாத நுழைவு கிடைக்கும் என்று தூதரகங்கள் தங்கள் வலைத் தளங்களில் அறிவித்துள் ளன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமிக்ஞைகளை மீறிச் செல்லும் மக்கள்
# காவு கொள்ளப்படும் பல உயிர்கள்
## கிளிநொச்சி புகையிரத நிலைய அதிபர்

(தருமபுரம்)

**புகையிரதக் கடவைகளில் புகையிரதம் வருவதற்கான சமிக்ஞை காட்டப்பட்டாலும் பெரும்பாலானவர்கள் அதைப் பொருட்படுத்துவதில்லை. இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. தயவுசெய்து சமிக்ஞைகளை மதித்து விழிப்புடன் செயற்படுமாறு கிளிநொச்சி புகையிரத நிலைய அதிபர் பு.பரமசிகாமனி தெரிவித்துள்ளார்.**

5 மாதங்களின் பின்னர் மீண்டும் புகையிரத சேவை வழமை போல் ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் வீதி சமிக்ஞைகளை மதித்து புகையிரதம் செல்லும் வரை சில நிமிடங்கள் தாமதித்து செல்வதன் காரணமாக உயிர்ச்சேதம், பொருட்சேதம் என்பவற்றை தவிர்த்துக் கொள்ள முடியும்.

எனவே அனை வரும் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-316)

# யாழ்.மாநகர சபை முன்னெடுக்கும் முத்தமிழ் விழா-2023

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இம்மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிமுதல் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக ஐ.பி.சி. தமிழ் குழுமத்தலைவர் க.பாஸ்கரன் மற்றும் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் செ.பிரணவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

அன்றைய தினம் இடம்பெறும் நிகழ்வுகளில் சிறப்பு நிகழ்வுகளாக நாத இளவரசன் பிச்சையப்பா ரஜேந்திரன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி, ஏழிசை மிருதங்க நர்த்தனாலயத்தின் "வெந்து தணிந்தது காடு" எனும் இசை நாட்டிய நாடக அரங்கு, "எம் மண்ணில் இன்றைய சூழலில் உயர்கல்வியும் மனித நேயம், கலாசார பண்பாடுகளும்" எனும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 2023 ஆம் ஆண்டுக்கான "அரசகேசரி" விருது வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இவ்விருதினை கோகிலா மகேந்திரன், எம்.பி. பாலகிருஷ்ணன், சாந்தினி சிவநேசன் ஆகியோர் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இந்திய அரசின் நிதியுதவியுடன்
# அமைத்து வழங்கப்பட்ட வீடுகளில் குடியிருக்க முடியாத நிலை
## புதிய வீடு அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைத்து வழங்கப்பட்ட வீடுகளில் குடியிருக்க முடியாதவாறு சேதமடைந்து காணப்படுவதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் செல்வி ரஞ்சனா நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாண்டியன்குளம் கிராம அலுவலர் பிரிவில் இந்திய அரசின் நிதி உதவித் திட்டத்தில் அமைக்கப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட வீடுகளின் கூரைகள் சேதமடைந்தும் வீடுகள் உடைந்தும் சுவர்கள் வெடிப்புக்கு உள்ளாகியும் காணப்படுகின்றன.

குறித்த வீடுகள் இவ்வாறு காணப்படுவதனால் குறித்த வீடுகளில் குடியிருக்க முடியாது ஆபத்தான நிலை காணப்படுவதாகவும் இந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகளை பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இந்திய வீட்டு திட்டத்தின் கீழ் அமைத்து வழங்கப்பட்ட குறித்த வீடுகள் அனைத்துமே சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இது தொடர்பாக ஏற்கனவே மாவட்ட செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள் நேரடியாகவும் பார்வையிட்டுள்ளனர்.

இந்த மக்களினுடைய கோரிக்கைகள் தொடர்பாக பல்வேறு மட்டங்களில் நடைபெறுகின்ற கலந்துரையாடல்களிலும் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-315)

# விவசாய பீடத்தில் திறன் மேம்பாட்டுச் செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள விவசாய பீடத்தில் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்கா தூதுவராலயத்தில் இருந்து யாழ்ப்பாணம் அமெரிக்கன் கோணர் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, விவசாய பீடாதிபதி பேராசிரியர் எஸ். வசந்தரூபா, செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி ரெ.சுவந்தினி மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், விவசாயத் துறை சார்ந்து வேலை செய்யும் பங்காளர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (நி-5)

# போதைப்பொருள் பாவனையால் அதிகரிக்கும் குற்றச்செயல்கள்
## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாலிநகர் பகுதியில் அதிகரித்த போதைப் பொருள் பாவனை மற்றும் கசிப்பு என்பவற்றால் பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் வன்முறைச்சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் இதை தடுப்பதற்கு பொலிஸ் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச பொது அமைப்புகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலிநகர் கிராமத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் கசிப்பு உற்பத்தி என்பன அதிக அளவிலே காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுவதனால் பல்வேறு வன்முறைச் சம்பவங்களும் குற்றச்செயல்களும் இடம்பெறுகின்றன.

அண்மையில் கூட வீட்டுக்குள் புகுந்து இளைஞர் ஒருவரை சுட்டுக்கொலை செய்த சம்பவத்தின் பின்னணியிலும் இந்த போதைப்பொருள் பாவனையே இருப்பதாகவும் பிரதேச பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு குறித்த பிரதேசத்தில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-315)

# வெற்றிலைக்கேணி கடற்கரை பகுதியில் பெருமளவிலான கஞ்சா பொதிகள் மீட்பு



(அராலி)

மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெற்றிலைக்கேணி கடற்கரை பகுதியில் இருந்து பெருமளவிலான கேரளக் கஞ்சா நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கஞ்சா பொதிகள் கைமாற்றுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், கடற்படையினரால் இந்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் 86.7 கிலோ எடையுடையவை என கூறப்படுகிறது. கடற்படையினர் இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-5-104)

# வவுனிக்குள வாய்க்கால் புனரமைப்புப் பணி ஆரம்பம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் ஐந்து மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

IWWRMP திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் வலது கரை வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன அமைச்சின் திட்ட அமுலாக்கம் மற்றும் ஒழுங்குபடுத்தலிலும் உலக வங்கியின் நிதிப்பங்களிப்பிலும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. (நி-5-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பச்சை குத்தும் போது தொற்று ஏற்படும் அபாயம்

## இலங்கை மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

**பச்சை குத்தும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தாததாலும் பல நிறுவனங்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாததாலும் எயிட்ஸ் உள்ளிட்ட சமூக நோய்கள் மற்றும் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக இலங்கை பச்சை குத்தும் சங்கம் தெரிவித்துள்ளது.**

இலங்கையில் கிட்டத்தட்ட ஐயாயிரம் பச்சை குத்தும் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 140 மட்டுமே சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து பச்சை குத்தும் நிறுவனங்களுக்கும் அறுவை சிகிச்சை அறையின் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் பச்சை குத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பணியிடத்தை கிருமி நீக்கம் செய்து கருவிகளை கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

பச்சை குத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஊசிகளை ஒரு முறை மட்டுமே ப்பயன்படுத்த வேண்டும். சில நிறுவனங்கள் அவற்றை பல முறை பயன்படுத்துகின்றன.

இதன் காரணமாக சமூக நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகின்றன.

இவ்வாறு பயன்படுத்தப்படும் ஊசி வகைகளை அழிக்கும் முறை இல்லை எனவும் அவற்றை முறையாக அப்புறப்படுத்தாவிட்டாலும் அவை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

பச்சை குத்துவது பற்றி அறிய இலங்கை அரச நிறுவனங்களில் எந்த பாடமும் இல்லை. அது பற்றி அறிவு இல்லாதவர்கள் இப்போது பச்சை குத்துகிறார்கள். இலங்கையில் இருந்தாலும் வெளிநாடுகளில் தனியான பயிற்சி வகுப்பு எடுக்க வேண்டும். ஒரு தொழிற்கல்வி பயிற்சிக்கான பாடத்திட்டத்தை நாங்கள் தயார் செய்தோம்.

ஆனால் அதையும் அரசு கவனிக்கவில்லை. முறையற்ற உபகரண பாவனைகளால் நோய்கள் பரவுகின்றன.

இதனால், சமூக நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஹெபடைடிஸ் தடுப்பூசி அவசியம். ஆனால் பலர் அதை செலுத்திக் கொள்வதில்லை.

பல நோயாளிகள் எங்களிடம் வருகிறார்கள். காயமடைந்த நிலையில் கொப்புளங்கள் என பல்வேறு நோய்கள் உள்ளன. சிலருக்கு என்ன மாதிரியான நோய் இருக்கிறது என்று கூடத் தெரியாது. டாட்டூவை சரியாகச் செய்து கொண்டால் இந்தப் பிரச்சினை வர வழியில்லை. உடலை மாற்றுவதற்கு முன், உடல்நிலையை சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என பச்சை குத்தும் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)

## கடந்த ஆண்டில் மட்டும் 463 யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் 463 யானைகள் உயிரிழந்துள்ளதாக இலங்கை சுற்றாடல் மற்றும் இயற்கை ஆய்வுகளுக்கான நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் உயிரிழந்த யானைகளில் கடந்தாண்டே பெருமளவான யானைகள் உயிரிழந்துள்ளதாக மையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளரான கலாநிதி ரவீந்திர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவங்களில் பெரும்பாலானவை மனித ஈடுபாட்டினால் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யானைகளின் எண்ணிக்கையை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அது சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலை தொடருமானால், இலங்கையில் காட்டு யானையைக் கண்டறிவது அரிதான நிகழ்வாகிவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2872

### மதுமிதா



உணவுப் பொருட்களைப் பதுக்கினால் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை -செய்தி. பிரிட்ஜ்ல கொழம்ப பதுக்குறதுக்கு எத்தனை வருஷம்ன்னு அப்படியே சொல்லிடுங்க.

### கௌதமி

வெள்ளிக்கிழமை ஆனா பக்தி ஸ்டேட்டஸ் வச்சா மட்டும் போதாது.




சாமி கும்பிடனும். அதுக்கு முன்னாடி குளிக்கனும்.

### கபில்

தினமும் உன்ன கும்பிட்டுத் தான் போறேன். அப்புறம் ஏன் எனக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்குற.



ஏது? என் கோவில் Cross பண்ணும் போது உன் கைக்கு நீயே முத்தம் கொடுத்துப்பியே அதுவா.

### குமரன்

தினமும் Interview போறானே தவிர வேலைக்குப் போக மாட்டேங்குறானே.




### ஆதி

என்ன அண்ணே திடீர்ன்னு ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆயிருக்கீங்க. நேத்து கூட ஒரு பொண்ணோட சிரிச்சிக்கிட்டு பைக்ல போனதைப் பார்த்தேன்.



ஆமாண்டா அதைத்தான் என் பொண்டாட்டியும் பார்த்துட்டா.

### துவாரகா

ஆசிரியர்- 2ல 2 போனா மிச்சம் எவ்வளவு?

மாணவன்- சரியா புரியல டீச்சர். மறுபடியும் சொல்லுங்க.

ஆசிரியர்- டேய் உன்கிட்ட 2 இட்லி இருக்குன்னு வச்சிக்கோ. நீ 2 இட்லி சாப்பிட்டா மிச்சம் என்ன இருக்கும்?

மாணவன்- சட்னி.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 238





பழுவேட்டரையர்களின் அந்தரங்க சூழ்ச்சியைச் சேர்ந்த கல்யாணங்கள்.

"தாத்தா! இன்னும் எதற்காக மர்மமாகவே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? விட்டுச் சொல்லுங்கள். பழுவேட்டரையர்கள் என்னதான் விரும்புகிறார்கள். ஊர் ஊராய்ச் சென்று அவர்கள் கூட்டம் போடுவதின் நோக்கம் என்ன? மதுராந்தகத் தேவனை வைத்துக் கொண்டு என்ன செய்யப் பார்க்கிறார்கள்?" என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"வேறு ஒன்றும் இல்லை. உனக்கும் உன் தம்பிக்கும் இராஜ்ய உரிமை இல்லையென்று செய்துவிட்டு, மதுராந்தகனைச் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் ஏற்ற எண்ணியிருக்கிறார்கள். அதற்கு உன் தந்தையின் சம்மதத்தைப் பெறுவதற்காகவே அவரைத் தஞ்சைக் கோட்டையில் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள்." என்றார் மிலாடுடையார்.

### ஐம்பத்தி மூன்றாம் அத்தியாயம்

### மலையமான் ஆவேசம்

அறிவைப் போலவே ஆற்றலும் ஆற்றலைப் போல அனுபவமும் பெற்று முதிர்ச்சி அடைந்திருந்த திருக்கோவலூர் மலையமான் அரசர் கடைசியாகக் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, ஆதித்த கரிகாலன் மூர்ச்சையடைந்து விழுந்து விடவில்லைதான். ஆயினும் சிறிது நேரம் செயல் இழந்து ஸ்தம்பித்து நின்று விட்டான். பார்த்திபேந்திரனும் வாயடைத்துப் போய் மௌனமாகி நின்றான். கடலும் ஓசை அடங்கி விட்டதாகத் தோன்றியது. தூரத்தில் படகிலிருந்து பண்டங்களை இறக்கி மரக்கலங்களில் ஏற்றுவோரின் 'ஏலேலோ' சத்தங்கூட அச்சமயம் அடங்கி நின்று போயிருந்தது.

வியப்புக்கு இடங்கொடுத்து விட்டதற்காக வெட்கப்பட்ட ஆதித்த கரிகாலன், சட்டென்று பாட்டனார் முகத்தை நிமிர்ந்து நோக்கி, "தாத்தா! இப்படியெல்லாம் நாடு நகரங்களில் சிலர் பேசி வருவதாக என் காதிலும் விழுந்தது. அது வெறும் பொய் வதந்தி என்று எண்ணியிருந்தேன். நீங்கள் இவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்களே? தெரிந்து கொண்டு தான் சொல்கிறீர்களா? இப்படியும் நடக்கக்கூடுமா!" என்றான்.

"ஏன் நடக்க முடியாது? உன் பாட்டனாருக்கு முன்னால் உன் பெரிய பாட்டனார் கண்டராதித்ததேவர் தானே சோழ நாட்டை ஆண்டார். அவருடைய குமாரனுக்கு உங்களைக் காட்டிலும் அதிக உரிமை இந்த ராஜ்யத்தில் உண்டல்லவா?" என்றார் மலையமான் மிலாடுடையார்.

"இல்லவே இல்லை! அந்த முழு அசடன், நாலு வார்த்தை பேசத் தெரியாதவன். கையில் வாள் எடுத்து அறியாதவன். பெண்ணாய்ப் பிறக்கத் தவறி ஆணாகப் பிறந்தவன். அவனுக்கு இந்த இராஜ்யம் உரிமையா? பால் மணம் மாறாத பன்னிரெண்டாம் பிராயத்தில் போர்க்களம் புகுந்தவர். வீரபாண்டியன் தலை கொண்ட சிங்கம், தோல்வி என்பதையே அறியாத வீராதி வீரர், ஆதித்த கரிகாலருக்கு உரிமையா? ஐயா! மிலாடுடையாரே! வயதாகி விட்ட படியால், தங்களுடைய அறிவு கூட மழுங்கி விட்டதா?" என்று சீறினான் பார்த்திபேந்திரன்.

அவனைக் கரிகாலன் அதட்டி அடக்கி விட்டு, "தாத்தா! எனக்கு இந்த இராஜ்யம் ஒரு பொருட்டு அல்ல. வேண்டுமானால் என் கை வாளின் உதவி கொண்டு இதைப் போன்ற பத்து இராஜ்யங்களை ஸ்தாபித்துக் கொள்வேன். ஆனால் இதில் நியாயம் எப்படி? முதலிலேயே மதுராந்தகனுக்குத்தான் இராஜ்யம் என்று சொல்லியிருந்தால் நான் குறுக்கே நின்றிருக்க மாட்டேன். நாடு அறிய, நகரம் அறிய மக்கள் எல்லாரும் அறிய எனக்குத் தான் அரசுரிமை என்று இளவரசுப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு இப்போது எப்படி மாறலாம்? உங்களுக்கு இது சம்மதமாயிருக்கிறதா?" என்று கேட்டான். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் வேலைக்காரன்



ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான் வணிகன்.

ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக்கொண்டு பனங்காட்டுக்குப் போ. அங்கே பலர் பனை மரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக் கொண்டு வா!" என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர். சிலர் கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில் சரியாக விழும். வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே" என்று நினைத்தான்.

"என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன்" என்ற எண்ணத்தில் தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடாரியால் அந்தப் பனை மரத்தின் அடிப் பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு அந்த மரம் விழக் கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள். "ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்" என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், சடசட வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவுதான் வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிருமாக மாடு துடித்துக் கொண்டிருந்தது.

இதைக் கண்டு அவன் திகைத்து விட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

( தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப் பெண்ணாக இருந்த 17 வயதான பிள்ளை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ள செய்தி பலரையும் வேதனைப்படுத்தியுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குறித்த பிள்ளையின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டிருப்பது ஆறுதலைத் தருகிறது.

அந்தப் பிள்ளையின் மரணம் தொடர்பில் உண்மையைக் கண்டறிவது அனைவரதும் கடமையாகும்.

ஓர் ஏழைப் பிள்ளை வறுமை காரணமாக, படிக்க வேண்டிய வயதில் வீட்டுப் பணியில் ஈடுபடுவதென்பது துன்பம் நிறைந்தது.

இவ்வாறானதோர் நிர்க்கதி நிலை ஏற்பட்டமைக்கு ஏதோவொரு வகையில் நம் மக்கள் சமூகமும் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைகள் முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆம், சிறுவர்களை – படிக்க வேண்டிய வயதில் இருக்கக்கூடிய பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதுதென்பது சட்டத்தைக் கடந்து மனச்சாட்சிக்கு விரோதமானது.

இவ்வாறான பிள்ளைகளிடம் வேலை வாங்கும்போது அவர்கள் நிச்சயம் வருந்துவார்கள். அதேநேரம் கடும் வேலைக்கு ஆளாகும்போது என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் திண்டாடுவார்கள்.

எனவே யாராக இருந்தாலும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற பாவச் செயலைச் செய்யாமல் இருப்பது மிகவும் அவசியமானது.

ஏனெனில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களிடம் வேலைவாங்குவதென்பது சந்ததியைத் தாக்கக்கூடிய பெரும் பாவச் செயல்.

உண்மை, எங்கள் தமிழ் மக்களின் வரலாற்றைப் பார்க்கும்போது, மலையகத்து சிறுவர்களை, பிள்ளைகளை அங்கிருந்து அழைத்து வந்து வீட்டு வேலைக்கு அமர்த்தி, அவர்களைக் கொடுமைப்படுத்திய கன்மவினை இன்னமும் எங்கள் இனத்தைச் சூழ்ந்திருக்கிறது.

ஆம், நம் மண்ணில் வசதி படைத்தவர்கள், படித்தவர்கள், உத்தியோக பலம் மிக்கவர்கள், மலையகச் சிறுவர்களை வீட்டு வேலை என்ற கோதாவில் அழைத்து வந்து அவர்களை வாட்டி வதைத்ததை ஒருபோதும் நாம் மறந்து விடலாகாது.

படிப்பறிவற்ற மலையக பெற்றோர்களை அவர்களின் பிள்ளைகளை பார்க்கக்கூட விடாமல், சிறு தொகைப் பணத்தைக் கொடுத்து ஏமாற்றியவர்கள் இன்று இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயுள்ளனர். அவர்களின் சந்ததி சீரழிந்து கிடக்கிறது. அவர்கள் குடியிருந்த மனைகள் பாழடைந்து கிடக்கின்றன.

ஆக, மலையகத்து ஏழை மக்களுக்கும் ஏழைச் சிறுவர்களுக்கும் நாங்கள் செய்த பாவத்தின் விளைவை ஏதோவொரு வகையில் நாம் அனுபவித்து வருகிறோம்.

ஆகையால், இந்த கன்ம வினையில் எவரும் அகப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆம், ஏழைப் பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்களிடம் இருந்து பிரித்து, அவர்களை வருத்தி வேலை வாங்குகின்ற கொடுமையை நீங்கள் எவரும் எந்த மனநிலையில் இருந்தாலும் அதைச் செய்து விடாதீர்கள்.

ஏனெனில் அந்தக் கன்மா நிச்சயம் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஏன் உங்கள் சந்ததியையும் நிச்சயம் தண்டிக்கும். கவனம்.

# அதிகாரப்பகிர்வுக்கு பாராளுமன்ற பெரும்பான்மை இடமளிக்காது என ரணிலுக்கு தெரியும்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப்பகிர்வுக்கு பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை இடமளிக்காது என்பதை ஜனாதிபதி ரணில் அறிந்தே பாராளுமன்ற அனுமதி வேண்டுமென கூறுகிறார் என சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரப் பகிர்வை வழங்க பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும்என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

தற்போதைய பாராளுமன்றத்துக்கு மக்கள் ஆணையிலையாது. இந்த ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல, எனவே மக்கள் ஆணை இல்லாதவர்கள் பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று கூறுவது மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையையே தோற்றுவிக்கும்என எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலை சம்பவம் மீண்டும் நிகழக் கூடாது என்றால் அரசியல்உரிமை, அதிகாரப் பகிர்வு என்பன நிறைவான வகையில் அர்த்தமுள்ள முறையில் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்.

இலங்கையில் கறுப்பு ஜூலை இனக்கலவரம் இடம்பெற்று 40 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மீண்டும் அவ்வாறான ஒரு சூழல் தோற்றம் பெறாமல் இருப்பதற்கு உறுதியான நிலைபேறான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றபோதும் நிலையான நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க நடைமுறைக்கு சாத்தியமான எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பின்னர் இந்தியாவின் தலையீட்டுடன் 1987 ஆம் ஆண்டு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது.

13 ஆவது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தும் போது அதற்கு பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்த வேண்டுமானால் அதனை பாராளுமன்றம்அனுமதிக்கவேண்டும் என்று கூறுவது முறையற்றது.

அதிகார பகிர்வுக்கு பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை இடமளிக்காது என்பதை அறிந்தே, பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும்என ஜனாதிபதி கூறுகின்றார்.

நாட்டில் 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் விளைவாக தற்போதைய பாராளுமன்றத்துக்கு மக்கள் ஆணை இல்லை அது போலியான பெரும்பான்மையையே கொண்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல. எனவே தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு வழங்க பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என மக்கள் ஆணை இல்லாதவர்கள் கூறுவது மீண்டும் கறுப்பு ஜூலையையே தோற்றுவிக்கும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

# உள்ளூராட்சி மன்றங்கள் கூடுவதற்கு பொதுவாக்கெடுப்பு அவசியம்

## சட்டமா அதிபர் அலுவலகம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களை மீண்டும் கூட்டுவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என சட்டமா அதிபர் அலுவலகம் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்ட கொடவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலம் மீதான விசாரணையின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் பிரேரணையாக கொண்டுவரப்பட்ட குறித்த சட்டமூலத்தின் சில உறுப்புரைகள் அரசியலமைப்பின் விதிகளை மீறுவதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலம் நிறைவேற்ற வேண்டுமாயின் அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது பொதுவாக்கெடுப்பு அவசியம் என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

குறித்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிகள் அரசியலமைப்பை மீறுவதாக தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 27 மனுக்கள் நேற்று (திங்கட்கிழமை) மீள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இதனைத் தெரிவித்தார். (ம-7)

# ஐ.எம்.எப் இன் மீளாய்வை எதிர்கொள்ள முடியும்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மீளாய்வு வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் 20% தற்போது நிறைவடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சூதாட்ட மற்றும் பந்தய வரி திருத்தம் தொடர்பான விதிமுறைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## 22 வயது இளம் யுவதி

# இரத்தக் காயங்களுடன் வீட்டிலிருந்து சடலமாக மீட்பு

(மாத்தறை)

இளம் யுவதி ஒருவர் வீட்டிலிருந்து இரத்தக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாத்தறை - திக்வெலை பிரதேசத்தில் நேற்று இந்தச்சம்பவம் பதிவாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

22 வயதுடைய பி.எஸ். சந்திரிகா என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பெற்றோருக்கு ஒரேயொரு பிள்ளையான சந்திரிகா, தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார்.

நேற்று வேலைக்குச் செல்லாது வீட்டில் அவர் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், நேற்று முற்பகல் 11 மணியளவில் வைத்தியசாலைக்குக் கிளினிக்கிற்கு சென்ற பெற்றோர், பிற்பகல் 2 மணியளவில் வீட்டுக்கு வந்தவேளை மகள் தனது அறையில் இரத்தக் காயங்களுடன் சடலமாகக் கிடந்துள்ளதைக் கண்டுள்ளனர்.

அவரது சடலம், பிரேத பரிசோதனைக்காக திக்வெலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த யுவதியின் பெற்றோரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் பிரேத பரிசோதனையின் பின்னரே மரணம் தொடர்பில் உண்மையான தகவல் தெரியவரும் என்று திக்வெலை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து


## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

24



கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பல்லவ செப்பு நாணயங்கள் கி.பி. 668 முதல் 740 வரையிலான காலத்தை உள்ளடக்கியது. மற்றும் பல்வேறு வகைகளை உள்ளடக்கியது. பல்லவர் ஆட்சி வளைகுடாவில் உள்ள மீன்பிடித் தளங்கள் மற்றும் இந்தியாவிற்கும் இலங்கையின் பாக்விரிகுடாவிற்கும் இடையே உள்ள வளமான முத்து தளங்களைக் கட்டுப்படுத்தியது. ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இலங்கையின் மீது படையெடுப்பதில் தோல்வியடைந்த பிறகு. பாண்டியர்கள் இலங்கையில் கணிசமான சொல்வாக்கைத் தொடர்ந்தனர். மற்றும் வணிகத்தைத் தொடர்ந்தனர்.



இலங்கையில்கிடைத்தபல் லவர்நாணயங்கள்

### தென்னிலங்கையில் அக்குருகொடை என்ற இடத்தில் 1999 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் பற்றி பேராசிரியர் பரமுபுஸ்பரட்ணம் அவர்களின் கருத்து

"தென்னிலங்கையில் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி - வரலாறு வெளிச்சத்திற்கு வந்திருக்கும் புதிய ஆதாரங்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் பரமுபுஸ்பரட்ணம் அவர்கள் "telibrary.com" என்னும் இணையத்தில் கருத்து வெளியிட்டிருந்தார். அது இங்கே தரப்படுகிறது.



தென்னிலங்கையில் அக்குருகொட என்ற இடத்தில் 1999 ஆம் ஆண்டு வீடு கட்டுவதற்காக அத்திவ்ாரம் வெட்டிய போது எதிர்பாராத வகையில் நூற்றுக்கணக்கான "ஈய" நாணயங்கள் வெளிவந்துள்ளன. இவற்றை முதலில் அவதானித்த அவ்வூர் மக்கள் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணராது அந் நாணயங்கள் பலவற்றை பழைய பொருட்களை வாங்கும் கடைகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தனர்.

அக்குருகொடையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 1 ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த சக்கர சின்னம் பொறிக்கப்பட்ட உள்நாட்டு நாணயம். முன்பக்கம் சக்கர அமைப்பு, பின் பக்கம் பிராமி எழுத்துக்கள்.

இந்நிலையில் இது பற்றிய செய்தி நாணயவியல் அறிஞரும் 1990 காலப் பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட இராணுவ தளபதியாகவும் இருந்த திரு. ராஜாவிக்கிரமசிங்காவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர் பிரான்ஸ் நாட்டு நாணயவியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவராக கடமையாற்றிவரும் எமது நாட்டுப் பேராசிரியர் பொபே ஆராய்ச்சியுடன் இணைந்து மக்களால் விற்பனை செய்த கடைகள், நாணயங்கள், வெளிவந்த இடங்கள், அவ்வூர் மக்கள் எனப் பல இடங்களில் இருந்து இந்நாணயங்கள் பலவற்றை சேகரித்து அவற்றைச் சிறந்த முறையில் ஆவணப்படுத்தி "Ruhuna an Ancient Civilization Revisit" என்ற நூலில் வெளியிட்டிருந்தனர்.

இந்நாணயங்கள் பலவற்றின் முன் பக்கத்தில் பிராமி எழுத்தில் அதை வெளியிடக் காரணமாக இருந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பது இந்நாணயங்களின் சிறப்பான அம்சமாகக் காணப்படுகின்றது. இவை பண்டைய இலங்கையில் வழக்கில் இருந்த எழுத்து, மொழி, ஆட்சியில் இருந்த சிற்றரசர்கள் முதலானவற்றை அறிந்து கொள்ள நம்பகரமான சான்றாகக் காணப்படுகின்றன.

நாணய மற்றும் சாசனவியல் அறிஞர்கள் இந்நாண யங்களில் தெளிவாக காணப்படும் எழுத்துக்களின் எழுத்தமைதியைக் கொண்டு இவை 2200 ஆண்டுக ளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பதை உறுதிப்படுத்தினர்.

இவை தென்னிலங்கையிலேயே வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பதை நாணயங்கள் காணப்பட்ட இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண், நாணய அச்சுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனால் நாணயங்களும் நாணய அச்சுக்களும் காணப்பட்ட இடம் பண்டைய காலத்தில் நாணயங்களை உற்பத்தி செய்யும் தொழிற் கூடமாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்துக்களும்



முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அக்குருகொடையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 1 ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த யானை சின்னம் பொறிக்கப்பட்ட உள்நாட்டு நாணயம் முன்பக்கம் யானை வலது பக்கம் நடந்து செல்கிறது. பின்பக்கம் பிராமி எழுத்துக்கள்.

இந்நாணயங்கள் பற்றி முதலில் ஆய்வு செய்த பேராசிரியர் பொபெயாராச்சி மற்றும் ராஜாவிக்கிரமசிங்கே ஆகியோர் நாணயங்களில் உள்ள எழுத்து வடிவத்தை வடபிராமியாகவும் அவற்றின் மொழியைப் பிராகிருதமாகவும் பார்த்தனர். ஆயினும் இரண்டு நாணயங்களில் தமிழ்ப் பிராமி எழுத்து பயன்படுத்தப்பட்டுள்ளதை முக்கிய அம்சமாகக் சுட்டிக் காட்டிய அவர்கள் தமிழ் மொழியில் புலமையற்ற காரணத்தால் அவற்றின் பெயர்களை பிராகிருத மொழியாகவே பார்த்தனர்.

இந்நிலையில் இந்நாணயங்கள் தொடர்பாக கொழும்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட தென்னிந்தியத் தொல்லியல் அறிஞர் பேராசிரியர் வை. சுப்பராயலு இந்நாணயங்கள் பற்றிய நூலை என்னிடம் தந்து நாணயங்களில் பொறிக்கப்பட்ட பெயர்களை மீள் வாசிப்பு செய்யுமாறு கூறியிருந்தார்.

இதற்கு வேண்டிய நாணய மூலப் பிரதிகளையும் நாணயங்களுக்குரிய அரிய புகைப்படங்களையும் பேராசிரியர் பொபேயாராச்சி மற்றும் ராஜாவிக்கிரமசிங்கே ஆகியோர் வழங்கியிருந்தனர். இந்நாணயங்கள் அனைத்தும் ஈயத்தில் வெளியிடப்பட்டிருப்பதால் கணிசமான நாணயங்களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் தேய்வடைந்து வாசிக்கப்பட முடியாத நிலையில் உள்ளன. ஆயினும் தேய்வடையாத நாணயங்களைக் கொண்டு அவற்றில் பொறிக்கப்பட்ட பெயர்கள் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளுக்கு உரியவை என்பது தெரிகின்றது.

அவற்றுள் ஐந்து நாணயங்களில் உதிரன், மஹாசாத்தன், கபதிகஜபன், தஜபியன், சடணாகராசன், சோழ(ட)ணாக(ன்) முதலான பெயர்கள் தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. இப்பெயர்களின் பின்னொட்டு சொல் தமிழில் ஆண் மகனைக் குறிக்கும் "அன்" என்ற ஆறாம் விகுதியில் முடிவதால் இவை தமிழ்ப் பெயர்கள் என்பதில் ஐயமில்லை. இந்த வாசிப்பை பேராசிரியர் சுப்பராயலு, தமிழ்ப் பிராமியின் தந்தை என அழைக்கப்படும் ஐராவதம் மகாதேவன் உட்பட தென்னிந்திய, இலங்கை சாசனவியல் அறிஞர்கள் பலரும் தமது ஆய்வு



களில் பொருத்தமானதாக எடுத்துக் கொண்டுள்ளனர்.

அக்குருகொடையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 1 ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த ஆமைச் சின்னம் பொறிக்கப்பட்ட உள்நாட்டு நாணயம், முன்பக்கம் யானை வலது பக்கம் நடந்து செல்கிறது. பின்பக்கம் பிராமி எழுத்துக்கள்.

பண்டைய கால நாணயங்கள் பொதுவாக அரசனால் அல்லது சிற்றரசனால் வெளியிடப்பட்டவை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் அரசனின் அனுமதி பெற்ற வணிகர்களும் மத நிறுவனங்களும் நாணயங்கள் வெளியிட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. இது பற்றிக் கௌடில்லியனின் அர்த்தசாஸ்திரத்திலும் குறிப்புக்கள் உள்ளன.

இந்நிலையில் இந்நாணயங்களில் ஒன்றில் தமிழில் "திஷபுர சடணா கராசன்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் விளக்கம் தென்னிலங்கையில் திஷபுரம் என்ற இடத்தில் ஆட்சி புரிந்த சடணாகராசன் (அரசன்) வெளியிட்ட நாணயம் என்ற பொருளில் அமைந்துள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்ப்பால்...

பாலூட்டிவிட்டு படுத்தியதாகவும் 30 நிமிடம் கழித்து பார்த்த போது குழந்தை அசைவற்று காணப்பட்டது.

உடனடியாக நெடுந்தீவு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை ஏற்கெனவே உயிரி ழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு யாழ்.போதனா வைத்தியசாலை யின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணை களை மேற்கொண்டார். (ம-7,33,60)

## வடமராட்சியில்...

ஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. நீதி மன்ற உத்தரவு பெறப்பட்டு குண்டினை மீட்பதற்கான நடவடிக்கையை பருத் தித்துறைப் பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (ம-7,60)

## கப்பல் சேவையை...

யுள்ளதாகவும், பணிகள் முடிவடைய இன்னும் 4 முதல் 5 மாதங்கள் ஆகும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் தொடங்கும் வடகிழக்கு பருவமழையின் நிலையைப் பொறுத்து கால அளவு மாறலாம் என இந்திய அதி காரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

## 13ஐ அமுலாக்கு...

கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர் களுடன் கலந்துரையாடியிருந்தார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து கட்சித் தலைவர் களும் முழுமையான அதிகாரப் பகிர் வுக்கு இணங்கினால் மாத்திரமே அரசி யலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன்போது தெரிவித்தார்.

இந்தநிலையில், சர்வகட்சி கூட்டத் துக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக் களின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## அமைதியான...

தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று முன்தினம் கறுப்பு ஜூலையின் நாற்பதாவது வரு டத்தை நினைவுகூர முயன்றவர்களை பொலிஸார் பலப்பிரயோகம் செய்து அகற்றியதை காண்பிக்கும் படத்தை பதிவு செய்து அவர் டுவிட்டரில் தனது கருத்தினை பதிவு செய்துள்ளார்

சுவிஸ் தூதுவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

40 வருடங்களிற்கு முன் கறுப்பு ஜூலையில் இழக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் நாங்கள் நினைவுகூரு கின்றோம்.

கடந்த காலங்களை கையாள்வதற் கும் ஐக்கிய எதிர்காலத்தை உரு வாக்குவதற்கும் அமைதியான முறை யில் நினைவுகூருவதற்கான உரிமை மிகவும் முக்கியமானது.

அனைத்து இலங்கையர்களுக்கு மான அமைதி, நீதி, நல்லிணக்கத்திற்கு சுவிட்சர்லாந்து தொடர்ந்தும் ஆதர வளிக்கும் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (ம-7)

## சர்வ கட்சி...

ஹேரத் தெரிவித்துள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பாக தீர் மானிப்பதற்காக ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சர்வ கட்சி கூட்டம் நாளை இடம்பெறவுள்ள நிலை யில் ஜே.வி.பி சர்வகட்சி கூட்டத்தை புறக்கணித்துள்ளது. (ம-7)

## பொலிஸ்...

பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக் குகளைப் பெற்றுக் கொள்வதற் காக, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நடைமுறைப் படுத்துவது தொடர் பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி பேச்சு நடத்தியுள்ளார்.

இதில், பொலிஸ் அதிகாரத்தை சிறிது காலம் கழித்தும், ஏனைய அனைத்து அதிகாரங்களை உடனடி யாக வழங்கவும் ஜனாதிபதி இணங்கி யுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நாளை புதன்கிழமை இது தொடர் பாக இணக்கப்பாட்டுக்கு வர, சர்வ கட்சி மாநாடொன்றையும் ஜனாதிபதி நடத்தவுள்ளார். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற காலத்தி லிருந்து, தேசிய பாதுகாப்புக்கு அச் சுறுத்தலான விடயங்களையே அவர் செய்துள்ளார் என்பது, வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் அனைவருக்கும் தெரியவரும்.

எனவே, மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரத்தை இரத்துச் செய் யும் வகையில், அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூல வரைபை நாம் தயாரித்துள்ளோம்.

ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள் ளடக்கிய சட்டத்தரணிகள் குழுவே இந்த வரைபை தயார் செய்துள்ளனர். இதனை நாம் அடுத்தவாரமளவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## பொலிஸ்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நீதி யரசர் சி.வி.விக் னேஸ்வரனுக் கும் இடையில் சந்திப்பொன்று நேற்றிரவு இடம் பெற்றது.

இந்தச் சந்திப் பின் ஊடகங்க ளுக்கு கருத்து ரைத்த பாராளு மன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ் வரன், இது முன் னரே திட்டமிடப் பட்ட ஒரு கலந்துரை யாடலாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் இந்திய விஜ யத்தின்பின் வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி என்னை அழை த்து கலந்துரை யாடுவதாக முன் னரே தெரிவித் திருந்தார்.

அதன் பிர காரமே இக்கலந் துரையாடல் இடம்பெற்றது.

13ஆவது திருத் தத்தினை அமுல் படுத்துவது தொட ர்பிலேயே இக் கலந்துரையாடல் அமைந்திருந்தது. ஜனாதிபதி 13இனை அமுல் படுத்தியே ஆக வேண்டும் என்ற தீர்மானத்தில் உறு தியாக உள்ளார். என்பதில் எதுவித மாற்றங்களும் இல்லை.

தமிழ் மக்களு க்கு 13ஆம் திருத் தச் சட்டம் போதுமா? இல் லையா? என்பது இரண்டாம் பட் சம். முதலில் நமது அரசியலமைப் பிலுள்ள 13ஆம் திருத்தத்தினை அமுலாக்குவதில் நாம் எதுவித தயக் கத்தினையும் காட்டக்கூடாது. மாகா ணங்களுக்கான பொலிஸ் அதிகாரங் கள் தொடர்பில் நமது தமிழ் அரசியல் வாதிகளின் கருத்துக்களை பெற ஜனாதிபதி எண்ணியுள்ளார். அவர் களிடம் நாளை இடம்பெறவுள்ள கூட் டத்தின்போது பொலிஸ் அதிகாரங் கள், அவை தொடர்பில் எடுக்க வேண் டிய நடைமுறைகள் அவை எவ்வாறு அமைய வேண்டும் என்ற தரவுகளை கேட்டறியவுள்ளார் என்றார். (ம-7)

## சிறுமியின்...

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காட்டில் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 17 வயது சிறுமி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

வீட்டில் புணிபுரிந்த குறித்த சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் விசாரணை மேற் கொண்ட பொலிஸார் சிறுமியின் உடற்கூற்று மாதிரிகளை மேலதிக பரி சோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ம-7)


மெகா பவர்
திகதி 24/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1533
S 16 30 35 75 77
54620

லக்கி 7
திகதி 24.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 011
L7 இலக்கம் 2 4
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 3 0 1 4 3 2

தன நிதானய
திகதி - 2023.07.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1215
Q 32 43 63 82 Q

கொவிசெத
திகதி 2023.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 3427
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 01 06 58 74

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 494
மீனம் 06 15 20 42 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 5185
H 6 8 2 5 0 1

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2159
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.07.24
தினம் திங்கட்கிழமை
07 12 30 61 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,085,420.40
"இரண்டாம் வரம்" 11 14 42 49 H

சனிதா
திகதி 2023.07.24 வெற்றி வாரம் 4320 வர்ணம் இளம் நீலம்
20 53 66 71 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,076,272.00
"இரண்டாம் வரம்" 19 46 48 52 C

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3871 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.24 தினம் திங்கட்கிழமை
32 42 43 50 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,136,260/-
"இரண்டாம் வரம்" 03 07 29 46

கப்றுக
திகதி 2023.07.24 வெற்றி வாரம் 1335
A 20 65 66 68 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 420,413,694.20
"இரண்டாவது வாய்ப்பு" 38 45 53 72 F
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.07.24 வெற்றி வாரம் 1941 வர்ணம் செம்மஞ்சள்
31 33 53 55 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,014,555.20
"இரண்டாம் வரம்" 20 41 60 61 B

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1985
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.07.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,828,070/-
11 30 65 73 K
"இரண்டாம் வரம்" 04 14 61 74 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலையை தெரிவு செய்து கனடா தூதுவர் கண்டிக்கிறார்

**சரத் வீரசேகர**

கறுப்புஜூலையை நினைவு கூர்ந்து கனடா தூதுவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தூதுவர் படுகொலைகளை தெரிவு செய்து கண்டிக்கின்றார் என தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1983 இல் சிங்கள காடையர்களால் கொல்லப்பட்ட தமிழர்களை நினைவுகூர்ந்து கனடா தூதுவர் டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சரத் வீரசேகர, படுகொலைகளை தெரிவு செய்து கண்டிப்பது அந்த நபரின் நாகரீக இயல்புகளை கேள்விக்குட்படுத்துவதுடன் அவர்களின் இரகசிய நிகழ்ச்சி நிரல்களை அம்பலப்படுத்துகின்றது என்றார். (ம-7)

## 3 வயது...

உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த செந்தில்குமார் - ரேவதி தம்பதிகளின் புதல்வியே இந்த சாதனையை படைத்துள்ளார்.

தனது மூன்று வயதில், உலக நாடுகளின் 40 தலைவர்களின் புகைப்படங்களை பார்த்து அவர்களின் பெயர்களை ஒரு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனை படைத்துள்ளார்.

உலக சாதனை புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனை புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் இதற்காக விண்ணப்பித்து ஏப்ரல் மாதம் சாதனை படைத்த சிறுமியாக அறிவித்து இவருக்கான இலச்சினை, பதக்கம் மற்றும் சான்றிதழ் என்பவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-7)

# யாழ். பல்கலைக்கழகத்தில் உணவுத் திருவிழா



யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தில் சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறை இரண்டாம் வருட மாணவர்களின் தலைமையில் உணவுத் திருவிழா நேற்று இடம்பெற்றது.

நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் திருநெல்வேலி பால்பண்ணைக்கு அருகில் அமைந்துள்ள முகாமைத்துவ மற்றும் வணிக பீட வளாகத்திலே இந்த உணவுத் திருவிழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா ஆரம்பித்து வைத்தார்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீட பீடாதிபதி பா.நிமலதாசன், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறைத் தலைவரும் பேராசிரியருமான சி.சிவேசன் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ், சிங்கள, மற்றும் இஸ்லாமிய கலாசார உணவு வகைகள் மற்றும் மேலைத்தேய உணவு வகைகள்; குடிபானங்கள் என பல் வேறுபட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வானது இரண்டாம் ஆண்டு முதலாம் அரையாண்டில் கல்வி கற்கும் மாணவர்களின் முயற்சியாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16375) 076 825 7716 (ஆகாஸ்)

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

Sri Lankan Visa Extension

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

பெண் விற்பனையாளர்கள் தேவை

எமது ஜவுளி கடைக்கு அனுபவமுள்ள அல்லது தொழில் பழக ஆர்வமுள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை

சிவகணேசன் Tex

41, பெரிய கடை, யாழ்ப்பாணம்

WORK IN CANADA

WORK PERMITS

COMPUTER TECHNICIANS

COMPUTER சம்பந்தமான DEGREE, DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

✔ 2 YEAR WORK PERMITS
✔ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✔ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

CIMS COLLEGE 0777-068-777

VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=

(16349)

T.P: 077 544 8503

காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை பகுதிக்குள் ஆறுகால் மடம் தில்லையவல் 2 ஆம் ஒழுங்கையில் 75 3/4 காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. அராலி வீதியூடாகவும் பாதை உண்டு. பரப்பு ரூபாய் - 15 இலட்சம் முதல் (16507)

077 352 5670
077 894 7293

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- செம்மண், நன்னீருற்று
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியிலிருந்து 1km தூரம்
- நிலப்பரப்பு
- ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் (650,000/=)
- நிலாவரை கிணற்றிலிருந்து 2Km தூரம்

076 057 0354, 076 826 0354 (16506)

யாழ் வீரசிங்க மண்டபத்தில்

15.07.2023 - 08.08.2023 வரை

ஆடி மாத ஆடை தள்ளுபடி

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலை சிறந்த ஆடைகள்



திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடை தெரிவுகள்.....

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

இந்தியன் செலக்ஷன்

காலம்: 15.07.2023 - 08.08.2023


இடம் : வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

(16509)


7 ஆம் ஆண்டு 6 ஆம் ஆண்டு

நினைவுகள்





| பிறப்பு: 12.05.1939 | இறப்பு: 10.08.2016 | பிறப்பு: 23.11.1950 | இறப்பு: 24.05.2017 |
|---|---|---|---|

**வயிரமுத்து சிவலிங்கம்** (ஓய்வுநிலை ஆசிரியர்) திதி: அட்டமி

**சிவலிங்கம் கனகமணி** திதி: திரயோதசி

கருத்து ஒருமித்த தம்பதியராய் சுற்றம் வியக்கும் வாழ்வை வாழ்ந்தீர்
உதாரண தம்பதியராய் ஊர் போற்ற உறவும் போற்ற
இணை பிரியாத வாழ்விலே பல்லாண்டு காலம் வாழ்ந்து சென்றீர்கள்
ஆண்டுகள் ஆயிரமானாலும் ஆயுள் உள்ளவரை ஆராதிப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குப்பிளான் தெற்கு, ஏழாலை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(16386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.